**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு மார்ச் 2025**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**

**மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

மார்ச் 2025, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை 04.06.2025 **(புதன்கிழமை) பிற்பகல் முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification-ஐ Click செய்தவுடன் **HSE Second Year Exam, March 2025 - Scripts Download**" என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாள்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்**, இதே இணையதள முகவரியில் "Application for Retotalling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து 05.06.2025 **(வியாழக்கிழமை) காலை** 11.00 **மணிமுதல்** 07.06.2025 **( சனிக்கிழமை) மாலை** 5.00 **மணிவரை** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் **மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும்** தேர்வர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்து, அதற்குரிய கட்டணத் தொகையை பணமாக செலுத்த வேண்டும்.

<u>மறுமதிப்பீடு</u>

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ. 505/-

<u>மறுகூட்டல்</u>

உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

**ஒம்/.**

**இயக்குநர்**

**நாள்** :. 03 .06.2025

**இடம்** : **சென்னை** – 600 006.